செ.வெ.எண்: 40 / ஜீன் / 2021 நாள்: 10.06.2021

**திருச்சிராப்பள்ளி மாவட்டம் இலால்குடியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்ட நிதியிலிருந்து மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி உபகரணங்களை மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் இன்று(10.06.2021) வழங்கினார்.**

----------

திருச்சிராப்பள்ளி மாவட்டம் இலால்குடியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்ட நிதியிலிருந்து மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1.38 இலட்சம் மதிப்பீட்டில் 2 நபர்களுக்கு இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள், 1 நபருக்கு 3 சக்கர சைக்கிள், 1 நபருக்கு சக்கர நாற்காலி என 4 நபர்களுக்கு உதவி உபகரணங்களை மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் இன்று(10.06.2021) வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து கொரோனா நிவாரண உதவியாக திருச்சி வாழும் கலை பயிற்சி மையம் மற்றும் IAHV சார்பாக இலால்குடி அரசு மருத்துவமனைக்கு ரூ.3,20,000/- மதிப்புள்ள 4 ஆக்சிஜன் செரிவூட்டிகளை மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் இலால்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.அ.சௌந்தரபாண்டியன், ஒன்றியக்குழுத் தலைவர்கள் திரு.இரவிச்சந்திரன் (இலால்குடி) திருமதி.ரசியா கோல்டன் ராஜேந்திரன் (புள்ளம்பாடி), இலால்குடி ஒன்றியக் குழு துணைத் தலைவர் திரு.முத்துச்செழியன், ஒன்றியக்குழு உறுப்பினர்கள், ஊராட்சித் தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் திரு.கி.ஆதிநாயகிரவி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.இரா.இரவிச்சந்திரன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.பி.குணசேகரன், திரு.கு.சரவணகுமார், வாழும் கலை பயிற்சி மையம் ஆசிரியர் திரு.செல்வம் (மாநில ஆசிரியர் ஒருங்கிணைப்பாளர்) திரு.சரவணன் (மாவட்ட வளர்ச்சி குழு ஒருங்கிணைப்பாளர்) மற்றும் தன்னார்வளர் தொண்டர்கள் திரு.சத்தியநாராயணன், திரு.பழனியப்பன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**

**உதவி இயக்குநர்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**திருச்சிராப்பள்ளி.**